உ

சிவமயம்



அனலைதீவு தெற்கு 6ம் வட்டாரத்தை சேர்ந்த

அமரர்

# திருமதி கணபதிப்பிள்ளை தையலம்மை

அவர்கள் சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்

30.10.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அனலைதீவு தெற்கு 6ம் வட்டாரத்தை சேர்ந்த

அமரர்

## திருமதி கணபதிப்பிள்ளை தையலம்மை

அவர்கள் சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்

30.10.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம்மையெல்லாம் கண்ணிமைபோல்
காத்துப் பேணி வளர்த்து அன்புவழி நடத்தி
அரவணைத்து ஆளாக்கி இத்தரணியில்
வாழ்வாங்கு வாழவைத்து எம்மைப்
பிரிந்து சென்ற தெய்வமே
எமது துயர்தீர உமது ஆத்மா சாந்தி பெற
உங்கள் பாதக்கமலங்களில்
இம்மலரைக் காணிக்கையுடன்
சமர்ப்பிக்கின்றோம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
06-07-1913

மறைவு
16-09-2006


# அமரர்
# திருமதி கணபதிப்பிள்ளை தையலம்மை

**நீதி வெண்பா**

ஆண்டு வியவருடம் புரட்டாதிச்சனி பதினாறதில்
பூண்ட அபரபட்சத் தசமிதன்னில் – மாண்புமிகு
கணபதிப்பிள்ளை மனைவி தையலம்மை நல்லாள்
அனல் ஏந்தியாடும் ஆனந்தக் கூத்தன் பாதம் சேர்ந்தாள் இசைந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

விநாயகக் கடவுள் துதி

தேவர்தொழு தெழுங்கருணைச் செல்வனே போற்றி!
சிறந்தொளிரு மங்கலசொ ரூபனே போற்றி!
ஓவறுசித் திகளனைத்தும் உதவுவோய் போற்றி!
ஒலிகெழுகிண் கிணிபாத சாலநூ புரங்கள்
மேவியொளிர் சரணனே போற்றி! மத தாரை
விரவியதிண் கபோலனே போற்றி! நின தருளால்
பாவமொடு பலபிணியும் பம்புவறு மைகளும்
பலவான இடர்களையும் பாற்றுக இன் புறவே.

-விநாயக புராணம்-

தேவாரம்

திருவே என் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதிமிக்க
உருவே என் உறவே என் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய் வல்வினை நோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
ஆடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணைபோற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி
காஞ்சிமாவடி வைகுஞ் செவ்வேள் மலரடிபோற்றி அண்ணான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

சாமியே சரணம் ஐயப்பா

## அனலைதீவு ஐயனார் துதி

பூரணைக்கிறைவா போற்றி!
புட்கலை கணவா போற்றி!
வாரணம் ஏறி எங்கள்
வருந்துயர் களைவாய் போற்றி!
ஆரணச் சுருதி ஏத்தும்
அடல் உருத்திர அண்ணலென்று
காரணங் கருதி ஏத்தும்
கடவுளே போற்றி போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிகரன் புதல்வா போற்றி!

ஐங்கரன் துணைவா போற்றி!

சபரிமா மலையில் வந்தே

தண்ணருள் பொழிவாய் போற்றி!

உரிமையாய் அனலைதீவில் உறைந்து

எமக்கு அருள்வாய் போற்றி!

திரிபுரம் எரித்த எங்கள்

சிவன் திருமகனே போற்றி!

வெள்ளை வாரணத்து அமர்ந்து

வினையெலாம் களைவாய் போற்றி!

கள்ளத்தை மனத்து அகற்றி

கருணையைப் பொழிவாய் போற்றி!

உள்ளத்துள் உண்மை என்ற

ஒளியினைத் தருவாய் போற்றி!

பள்ளத்தில் வீழ்ந்திடாது உன்னன்புப்

பாதத்திற் சேர்ப்பாய் போற்றி!

திருச்சிற்றம்பலம்

**சொர்க்கத்தைத் தேடி நாம் எங்கும் போக வேண்டியதில்லை.**
**கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம் பிறரிடம் நாம் காட்டும் தூய அன்பு, நமக்கு உதவ முடியாத ஜீவன்களிடமும் காட்டும் கருணை இவற்றினால் நம்முடைய மனதிற்குக் கிடைக்கும் நிறைவே சொர்க்கமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைப் பாதையில்...

இலங்கை வளநாட்டின் செந்தமிழர் திருநாடாம் யாழ்ப்பாணத்தின் தென்பால் சப்த தீவுகளில் ஐயனார் "அஞ்சேல்" என்று அபயமளித்து எந்நாளும் அருள்பாலிக்கின்ற அனலையம்பதியிலே செல்வச்செழிப்போடு வாழ்ந்த பக்திமான் நாகலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளுக்கு அவர்களின் இல்லறத்தின் பயனாக நல்மணிகளான, நல்முத்தாய் நாகமுத்துவையும் நற்குணவான் ஐயம்பிள்ளையையும் தையலவன் தையலம்மையையும் தர்மசீலனாம் சோமசுந்தரத்தையும் நற்குணத்தாள் பார்வதியையும் தங்கமான தங்கவேலுவையும் பண்பாளன் சுப்பையாவையும் நல்லாள் இராசமணியையும் இலங்குபுகழ் லெட்சுமியையும் மக்களாகப் பெற்றது மாண்புறு வாழ்வன்றோ!

இல்லறமென்னும் வாழ்வதனில் வசந்தம் வீசிட தாருண்யனான அழகுபொருந்திய ஆணழகன் கணபதிப்பிள்ளையை கரம்பிடித்து இல்வாழ்வை தொடங்கினரே! நல்லறத்தின் பயனாக சிலையனைய வடிவுடைய செல்வ மக்களைப் பெற்று சிறப்புடனே வாழ்ந்திட்டார்.

நல்முத்துக்களாய் வந்துதித்த தானைத் தலைவன் போல் பொறுப்புடைய தலைமகனாம் கந்தசாமியையும், நற்குணத்தோன் திருஞானத்தையும் தருமர் போல் விளங்கிய குமரேசனையும் பொறுமையின் சின்னமான சியாமளவல்லியையும் ஒருங்கமைத்த நல்லாள் யோகராணியையும் உத்தமனாய் உருவெடுத்த அருமை மகன் தில்லையம்பலத்தையும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தனரே!

அக்காலமதில் பிள்ளைகளும் சிறுவயதினராக இருந்த வேளையில் அவருடைய வாழ்க்கைத் துணையை கடலிலே காலனவன் பறித்து, துர்ப்பாக்கிய நிலையில் வாழ்க்கையில் பிள்ளைகளை வளர்த்திட வகை தெரியாது கஸ்டங்களை அனுபவித்து ஏதோவொரு வகையில் பிள்ளைகள் வளர்ந்து அவர் துயர் துடைத்தனர்.

வசந்த வாழ்வில் வளம்பெற பிறந்த மண்ணைவிட்டு வட்டக்கச்சியெனும் வளங்கொழிக்கும் பிரதேசத்தில் விவசாயக் காணிகளைச் சொந்தமாகப் பெற்று வாழ்வாங்கு வளம்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரோங்க பிள்ளைகளைப் படிப்பித்தும் உயிருக்கு உயிரான பிள்ளைகளை பாசமுடன் வளர்த்தும்

"இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க

பசித்து வருவோர்க்கெல்லாம் உணவளித்து அகமகிழ்வார். அவர் உயிருடன் இருந்த காலங்களிலும் சரி, அவர் இறந்த பின்னரும் அவரின் விருந்தோம்பல் பண்பு பற்றி அன்னையைப் புகழாதவர் கிடையாது. அத்துடன் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க சாகும் வரையிலும் பிள்ளைகளுக்கோ மற்றவர்களுக்கோ வைத்தியசாலையை அணுகியதற்கு வாய்ப்பளிக்காமல் வாழ்ந்தார். இப்படியாக எல்லாச் சிறப்பும் பொருந்திய நற்குணவதியாக வாழ்ந்த வேளையில்!

பருவ வயதறிந்து பண்பாளன் கந்தசாமி – கமலாம்கிகையை கைப்பிடிக்க மற்றைய மக்கள் செல்வமாய் உதித்திட்ட திருஞானம் - கமலத்தையும் குமரேசன் - லலிதாதேவியையும் சியாமளவல்லி – சண்முகநாதனையும் யோகராணி – நவரெத்தினராசாவையும் தில்லையம்பலம் - இராஜேஸ்வரியையும் வாழ்வில் இணைந்திருந்த வேளையில்,

அவர்களது பிள்ளைகளாகிய பேரப்பிள்ளைகளெனும் பெரும் செல்வத்தையும் பார்த்து பூரித்து களிப்புற்று வாழ்ந்தார்.

1996 ல் சொந்த மண்ணில் சுகம் தேடமுடியாது இடம்பெயர்ந்து மகள் குடும்பத்துடன் இந்தியா வந்து தனது வாழ்நாளில் அங்குள்ள எல்லாப் புண்ணியத் தலங்களையும் தரிசித்து அங்குள்ள மக்களுடனும் இனிமையாகப் பழகி "ஔவைப்பாட்டி" என்று அழைக்கும் அளவுக்கு நல்ல சந்தோசமாக வாழ்க்கையை களித்தார். வாழ்க்கையில் இன்ப துன்பம் சுழல் சக்கரம் அதுபோல சந்தோசம் நீடிக்கவில்லை. அங்கே ஈழத்தில் ஆருயிர் மகன் திருஞானத்தின் மறைவு கேட்டும், அருமைச் சகோதரி பார்வதியின் மறைவு கேட்டும் அருமை மகள் யோகராணியின் அன்புக் கணவரின் (நவரெத்தினராசா) மறைவு கேட்டும் இளமையில் மகளின் வாழ்வு முடிவடைந்து விட்டதே என்று எண்ணி எண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத்துயரில் ஆழ்ந்து இருந்தார். 2003ம் ஆண்டு மகள் கனடா செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாக அன்னை மீண்டும் பிறந்த மண்ணாகிய அனலைதீவிற்கு செல்ல வேண்டியதாயிற்று. அங்கும் அவருக்கு, சென்ற சில மாதங்களில் மகன் குமரேசனின் மறைவு ஆழ்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் அவர் சுயநினைவை இழந்து துன்பப்பட்டார்.

வெளிநாடுகளில் வாழ்ந்த பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் அவரது இறுதிக்காலத்தில் பங்கு கொள்ள முடியாத அளவற்ற வேதனையில் இருந்தாலும் மற்றைய பேரப்பிள்ளைகள், மருமகள்மார் படுக்கையில் இருக்கும் போதும் சரீர உதவிகளைச் செய்து இறுதி மூச்சுப் பிரியும் போதும் சரி ஒருவித குறையுமில்லாமல் செய்து முடித்ததையிட்டு மனம் திருப்திப்படுகின்றோம்.

"அன்னை இறந்த பின்பு நல்லமாதிரி இறுதிக்கிரியைகளை செய்து விடு கந்தசாமி என்று அடிக்கடி கூறுவா" ஆனால் விதி யாரை விட்டது. கொழும்பில் இருந்த மகனுக்கு கூட இறுதிக்

கிரியைகளை செய்யமுடியாமல் தற்போதைய சூழ்நிலை தடுத்துவிட்டது.

அத்துயர் எங்களையும் அன்னையையும் சாகும் வரையில் மனதளவில் பாதித்துள்ளது. என்செய்வோம் விதியை யாரால் வெல்ல முடியும்!!

இந்நிலையில் 16.09.2006 அன்று சனிக்கிழமை அபரபட்ச தசமி (ஆவணி 31ம் நாள்) திதியில் அன்னை தனது 93 வது தனில் இத்தரணியை விட்டு இறைஜோதியில் கலந்தார். அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறையருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவான்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன்மார் புலம்பல்

எத்தனை துன்பங்கள் எத்தனை இன்பங்கள் வந்தபோதும் மனம் சலிக்காது பொறுமையுடன் வளர்த்தெடுத்த அன்புத் தெய்வமே! அன்னமூட்டிய வாய்க்குகடைசி நேரத்தில் வாய்க்கு அரிசி போட்டு கொள்ளியிட முடியாத பாவிகளாயினோம். துயரம் ஆறாதே! ஆறாதம்மா!!

உனது கடைசி ஆசையையும் நிறைவேற்ற முடியாத பாவியானேன் இத்துர்ப்பாக்கிய நிலை யாருக்கும் வரக்கூடாது தாயே! அம்மா!!

சாகும் வரை ஆறாது ஆறாது இத்துயர் ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ இம் மானிலத்தே! என்செய்வோம். அம்மா நீ மோட்சத்துக்கு செல்வாய் என்பது உறுதி. அங்கிருந்து எங்களை ஆசீர்வதிக்க வேண்டி ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

## மகள்மார் புலம்பல்

நூறு வயதென்ன அம்மா நீ எத்தனை வயது சென்று மடிந்தாலும் அம்மா அம்மா தானே! எங்களால் எப்படி ஆறமுடியுமம்மா? உனது பிரிவை கடைசி நேரத்தில் உங்கள் அண்ணரையும் மகன் கந்தசாமியையும் சியாமளாவையும் கூப்பிட்டதையும் எண்ணும்போது எங்களால் தாங்கமுடியவில்லையம்மா. உனது பிரிவை உங்களை இந்தியாவில் விமான நிலையத்தில் கொழும்புக்கு ஏற்றும் போது என் முகத்தைப்பார்த்து என்னை தனியே விட்டு நீ போகிறாயே, நீ எப்போ திரும்பி வருவாய் என்று என்னைப் பார்த்துக் கேட்ட அந்த முகத்தின் சோகம் என் கண முன்னால் வந்து வாட்டுதம்மா. அந்தப் பிரிவை எப்படியம்மா நான் மறக்க முடியும். அம்மா 2005ல் வந்து உங்களைப் பார்த்த போது சியாமளா என்று அழைக்க முடியாத மனமாற்றத்தில் பேதலித்து இருந்தீர்களே, வந்து பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன் என்ற மனநிலையில் சிறிது ஆறுதல் அடைகின்றேன் தாயே தெய்வமே! இளம்வயதில் மருமகனை இழந்து விட்டேன் என்று யோகம் ஆகிய என்னை பேரப்பிள்ளைகளை கொண்டு வரவில்லை என்று நான் இந்தியா வந்த சமயம் கேட்டாயே! என் செய்வேன் நானும் கணவன் பிரிவாலும் உங்களின் பிரிவாலும் நோயுற்றுள்ளேன். எங்கள் அம்மா நன்மைகள் செய்தார். மனதாலும் யாருக்குமே தீங்கு நினைத்திருக்க மாட்டார். உள்ளொன்று வைத்து புறம்பொன்று பேசாத உத்தமியே! அம்மா! உனது ஆத்மா சாந்தி அடைய வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றோம். பத்து மாதம் சுமந்து பெற்ற எங்கள் தாயை நாம் எப்பிறப்பில் காண்போம் இனி, எங்களையும் துன்பம் துயரம் வராமல் இறையடியில் இருந்து ஆசீர்வதியுங்கள் அம்மா!!!

## மருமக்கள் புலம்பல்

அன்பான மாமியே, நாங்கள் உங்களை மாமியாக நினைக்க முடியாத அளவு ஒரு தாயாகவே உங்களை பார்த்தோம். அதே போல் மருமக்கள் என்ற பாணியில் அல்லாமல் உங்களது பிள்ளைகளைப் போல எங்களுடன் பாசத்துடன் வாழ்ந்தீரே! நாங்களும் உங்களுக்கு எந்தக் குறையுமில்லாமல் உமது பணிகளை சரிவரச் செய்தோம். ஏந்த நேரமும் வாய் நிறைய மருமகனே என்று கூப்பிடுவீர்கள். மருமகள்மாராகிய எங்களை மகள் போல பாசத்துடன் பழகினீரே. கடைசிக் காலங்களில் உங்களது கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு பாக்கியம் கிடைத்ததற்கு நாங்கள் மனநிறைவடைகின்றோம். எப்பிறப்பில் உங்களை (அம்மா) மாமியே காண்போம் இனி. பிறந்தவர் இறப்பது உறுதிதானே, ஆனால் பாசம் என்று ஒன்று யாரைத்தான் விட்டு வைத்தது. ஆத்மா சாந்தி பெற வேண்டி நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

எமதன்பின் இனிய பாட்டியே
வானத்திலே நிலா அதனைச் சுற்றி
நட்சத்திரங்கள் இருப்பதைப் போல்
உம்மைச் சுற்றி நாமிருந்து
கூடிய கூட்டமென்ன
பாடிய பாட்டென்ன
கேட்டறிந்த கதைகளென்ன
அன்றிருந்த ஆனந்த நிலா போல்
வேறுயார் எமக்கு இங்குண்டு
வேதனை தாழோம் அந்தோ!

## உற்றார் உறவினர் புலம்பல்

இல்லற வாழ்வில் மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளுடன் இன்பமுடன் வாழ்ந்த உத்தமியே உனது அன்பான சிரித்த முகத்தையும் வந்தோரை வாவென்று அழைத்து வரவேற்கும் பண்பும் விருந்தோம்பலும் மற்றவர்களுக்கு தலையிடி, துன்பம் என்றால் அது தனக்கு வந்தது போலத் துடிக்கும் மனப்பாங்கும் அந்த அன்னமிட்ட கைகளையும் கடவுள் பக்தியையும் எங்களால் மறக்க முடியாது தாயே! சகோதரியே! எப்பிறப்பில் உன் முகத்தை காண்போம் இனி, இவ்வுலகில் நீங்கள் செய்த புண்ணியங்கள் விண்ணுலகில் மோட்சத்தையடையவும் ஆத்மா சாந்தியடையவும் வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிறர் செய்த உதவியை உணர்ந்து அதற்கு நன்றிபாராட்டுதல், பொறுமையுடையவராய் இருத்தல், இனிய சொற்களையே பேசுதல், எந்த ஒரு உயிருக்கும் துன்பம் தரும் எதையும் செய்யாதிருத்தல்,கற்றறிதல், உலகத்தோடு ஒட்டி வாழ நினைத்தல், அறிவுடைய பெரியோர்களைத் துணையாகக் கொண்டிருத்தல், நல்ல குணம் உடையவர்களோடு நட்புக் கொண்டிருத்தல் எனும் எட்டு உயர்ந்த பண்புகளே ஒழுக்கத்தின் உயிர் நாடியாகும்: ஒழுக்க நெறி என்னும் உயர்விளைச்சலுக்கு விதையாகும்.

–ஆசாரக்கோவை–



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

## காப்பு

கரும்பு மிளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவும் மேன்மே – லருந்திக்
குணமுடைய ராயிருந்து குற்றங்க டீர்க்குங்
கணபதியே யிக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேகுதனி லேறி
வருமரன்றா னீன்றருளு மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செற்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.
ஒற்றை யணிமருப்பு மோரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழி மூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தை தன்மனத்தி லெப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று.

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவி லமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே முவுல குந்தொழு தேத்தும்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி யென்னுந் திருவே
எக்கால முமுனைத் தொழுவேன் இயலிசை நாடக மென்னும்
முத்தமிழ்க் கல்விக லெல்லாம் முழுது மெனக்கருள் - செய்தென்
சித்தந் தனிலி ருந்து திருவருள் செய்திடு வாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிறபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

## கதை

மந்தர கிரியில் வடபா லாங்கோர்
இந்து வளர்சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியும்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
கடவுளா லயமுங் கடிமலர் பொய்கையுந்
புதல்வரைத் தருகெனப் பொருப்பர சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளின்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க் குயிரே
அரனே மறையவற் கருள்புரிந் தருளென
அந்தவந் தணனுக் கிந்தநற் பிறப்பின்
மைந்தரில் லையென மறுத்தவ னுரைப்ப
எப்பரி சாயினு மெம்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் றனக்கருள் செய்கென
எமையா ளுடைய வுமையான் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை யவளும் மனந்தளர் வுற்றுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்றிடு மானுடப் புன்பிறப் பெய்துதல்
நன்றல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்
கறைமிடற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவர்க்குநீ பிள்ளை யாகச்
சென்றவண் வளர்ந்து சிலபகற் கழித்தால்
மன்றல்செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத் தருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபின் னன்னையு மத்தனும்
மையார் கருங்குழல் வாணுத றன்னை
மானுட மறையோற்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென
மற்றவன் றன்னையுன் மணமகனாகப்
பெற்றிட லரிதெனப் பெயர்த்தவர் பேச
அருந்தவ முயற்சியா லணுகுவேன் யானெனக்
கருந்தட னெடுங்கட் கவுரியங் குரைப்ப
மருமலி கமல மலர்தடத் தருகிற்
றருமலி நிழற்றவச் சாலைய தமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் புரிதலும்
அரிவைத நருந்தவ மறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மானிட மேந்தும் வண்ணம தொழித்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயி றவம் புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணறுங் கூந்தற் றையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிங் கியற்றுவ தென்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடவென் றுரைத்தலும்
நன்றெனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினி லேறி மான்மழுந் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பு மெலும்பும் ப∴றலை மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பித்தன் றன்னை
நச்சிநீ செய்தவம் நகைதரு நுமக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவ ணாணமுற் றணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதா யிருவர் தாழினை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றின னென்றலுந்
தோடலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தணிமனை கொணர்கென
மாடக யாழ் முரல் மங்கைய ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைம்மலர்க் குழலி வந்தெனை யழைக்கில்
அம்மனைப் புகுவனென் றந்தண னுரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடத்திக் கொணர்கெனச்
சிவனை யிகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்று
சிற்றிடை மடந்தையும் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுக நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துதற் கரிதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத லிளையோர்க் கியல்பெனத்
தந்தையுந் தாயுத் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுத லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்ப னாகும்
வேதியன் பழைய விருத்தனென் றெண்ணி
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்து பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை யமுதுசெய் வித்துச்
சந்தனக் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூ ரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை யடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டி லுகந்துமுன் வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமறை முனிவனைத் தாழினை வணங்கத்
தேனமர் குழலி திருமுக நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியி னயனமுந் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத் திலங்கக்
கூன்மதி நிலவு கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமக டானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவொடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே
அரியய னிந்திர னமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுண ரிராக்கதர்
பூத ரியக்கர்கிம் புருட ரலகை
சித்தர்தா ரகைகந் தருவர்கள் முதலாக்
கணிக்கரும் பதினெண் கணத்திலுள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந் ததற்பின்
மன்றலங் குழலிக்கு வதுவைநாட் குறித்துத்
தென்றல்வந் திலங்கு முன்றி லகத்துப்
பொன்றிகள் பவளப் பொற்கா நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் றகட்டா லழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திக டோறும் பலமணி பதித்துத்
தோரண நாட்டித் துகில்வி தானித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறும் திருவிளக் கேற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியு நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தற் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசூரர் மகளிர் மலைமக டன்னைத்
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பி ரானையு மிளங்கொடி தன்னையும்
உம்ப ரெல்லாம் மொருங்குடன் கூடிக்
கடலென விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந் தேத்த மகிழ்ந்துட னிருத்திப்
பறையொலி யோடு பணிவளை யார்ப்ப
வதுவைக் கேற்ற மறைவிதி நெறியே
சதுர்முக னோமச் சடங்குக ளியற்றத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தறுகலற் றொளிபொற் றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியை சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ வெரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழற் பூவைதன் னுடனே
ஓதநீர் வேலைசூ ழுஞ்சையம் பதிபுக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீயென
வருங்கருங் குழலாண் மற்றுமுன் டோவெனத்
திருத்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்துவிழை யாடல்கண்
டொழிர்மணிப் பூணா ளுரவோ னுடனே
இவ்வகை யாய்விழை யாடுவோ மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக
மதர்விழி யுமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க வானினம் பெருகச்
செந்தழல் வேள்விவே தாகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல வரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோ
டைங்கர தலமு மலர்ப்பத மிரண்டும்
பவளத் தொளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோ லகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியி னயனமு முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய முர்த்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கை மனமிக மகிழ்ந்துட நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்த நான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க
ஆங்கவர் தங்கட் கருள்சுரந் தருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரண மாகப் கலகனி யருந்தி
ஏரணி யாலின்கீ ழினிதிரு வென்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்தினி திருந்தபின்
வானவ ராலு மானுட ராலுங்
கானமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக லாலுங் கால னாலும்
ஒருவகை யாலு முயிரழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐம்முகச் சீயமொத் தடற்படை சூழக்
கைம்முகம் படைத்த கயமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண் டேங்கி
அடுந்தொழிற் குலிசத் தண்ணலு மமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு மும்புர மெரித்தோன்
அஞ்சலீ ரென்றவர்க் கவையங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனை மாமுகத் தவுணனோ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா வென்று விடைகொடுத் தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்
பாங்குறு மவன்படை பற்றறக் கொன்றபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சூரன் மேல்
ஒற்றைவெண் மருப்பை யொடித்தவ னுரத்திற்
குற்றிட வெறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென வெழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்தவன் பொரவே
வந்தமூ டிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறின னிப்பால்
எறிந்தவெண் மருப்பங் கிமைநொடி யளவிற்
செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்லவைக் கதில்வேல் விழிபடைத் தருளும்
வல்லவை தனைத்தன் மனையென மணந்தே
ஓகையோ டெழுந்தாங் குயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிக் கயல்கமு கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனையர்ச் சித்துக்
கணபதீச் சுரமெனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தம்மன மகிழ
இங்குவந் தன்புட னெய்திய பின்னர்க்
கணங்களுக் கரசாய் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்திவ னேவல்செய் திடுநாள்
அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென் றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணிய பெறுநாள்
ஒப்பரும் விரதத் துறுமொரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்கா தாற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவரைங் கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருமலன் குமர விருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழு தடியிணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக் கதனால்
பேழை போல் வயிறும் பெருத்தகாத் திரமுந்
தாழ்துளைக் கையும் தழைமுறச் செவியுங்
கண்டன நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டிங் கிகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவ ருரைக்குமித் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவுமெய் துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லா மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளித் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டன னந்நாண்
மார்கழித் திங்கண் மதிவளர் பக்கஞ்
சதையந் தொட்ட சட்டிநல் விரதமென்
றிதயத் தெண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்
வைப்புட நோற்ற வகையினிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனு மிளைய தம்பியர் நால்வரும்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி
எண்ணிய விரத மிடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்ந்த செறுநரை வென்று
மருமலர் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டளி துதையும் பசுந்துளாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளர்த்துத லுற்றான்
அக்குநீ றணியு மரன்முத லளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடலைத் திடும்பொன் னொத்தொளி விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிசூ ரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருக் புடையோன்
ஒருகையிற் றந்தமும் மொருகையிற் பாசமும்
ஒருகையின் மோதக மொருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்க ளுஞற்றிடும் போதும
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தாற்
றீங்குறா தெல்லாஞ் செயமுண் டாகும்
கரதல மைந்துடைக் கணபதிக் குரிய
விரதமொன் றுளததை விரும்பினோற் றவர்க்குச்
சந்ததி தளைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியி நினைந்த பொருள்கைக் கூடும்
மேவலர் தமையும் வென்றிட ளாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூருவ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்
பத்தியோ டர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கு மவன்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒள்ளிய வருட்டிரு வுருவுண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணா லமைத்தலுந் தகுமால்
பூசைசெய் திடுமிடம் புனிதம தாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கி
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளைஇ நிறைகுடத் திருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகனு ருவைச்
சிந்தையி நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனமுத லர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்தமிர் தத்தா லபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திர னென்னுமந் திரத்தால்
மாசக லிரண்டு வந்திரஞ் சாத்திப்
பொருந்துமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
றிருந்தும் பளிதத் தீபங்கொடுத்துப்
பச்சறு குடனிரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்த னீசுர புத்திரன்
ஆகு வாகன னருடரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னுநா மங்களால்
ஆரம்பத்துட னர்ச்சனை பண்ணி
மோதக மப்ப முதற்பணி காரந்
தீதகன் மாங்கனி தீங்கத னிப்பழம்
வருக்கை கவித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பாறயிர் போனகம்
விருப்புள சுவைப் பொருள் மிகவுமுன் வைத்து
உருத்திரப் பிரியவென் றுரைக்குமந் திரத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குப சாரமும்
மற்றவன் றிருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி யிருபிறப் பாளர்க்
குண்ணறு சுவைசேர் ரோதன நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க் கீந்திட் டருச்சகன் றனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் றானமாக் கொடுத்து
நைமித் திகமென நவிறரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையு முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரனிவன் றன்னைமுன் னர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட வெரித்தான்
உருத்திர னிவனை யுவாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை யிவன்றாளர்ச்சனை பண்ணி
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாடம யந்தி
அன்னா ளிவனை யர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனைய டைந்தாள்
ஐங்கர கடவுளை யர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகிரத னென்னும் பார்த்திப னிவனை
மகிதலந் தன்னின் மலர்கொடர்ச் சித்து
வரநதி தன்னை வையகத் தழைத்தான்
அட்டதே வதைகளு மர்ச்சித் தவனை
அட்டபோ கத்துட னமிர்தமும் பெற்றார்
உருக்குமணி யென்னு மொண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோ மளவிற் குஞ்சர னவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டுபாண் மிழற்றா மலர்கொடர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் றனைப்புறங் கண்டு
யாமுமங் கவளை யின்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னி லெண்ணுதற் கரிதால்
அப்படி நீவிரு மவனையர்ச் சித்தால்
எப்பொருள் விருமிபினீ ரப்பொருள் பெறுவீர்
என்றுகன் றெறிந்தோ னெடுத்திவை யுரைப்ப
அன்றுமுற் றருமனு மனுசரு மிவனைப்
பூசனை புரிந்துகட் புலனிலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையி நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்
டந்தமில் செல்வத் தரசியல் பெற்றார்
ஈங்கிது நிற்க லிவ்விர தத்தியல்
ஓங்கிய காதைமற் றொன்றுரை செய்வாம்
கஞ்சநான் முகன்றருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனதாள் மாயைதன் வயிற்றிற்
சூரனென் றொருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனு மமரரு முனிவரும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை யிறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் போமி னீரென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தூடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிய வானோ ரொருங்குடன் கூடப்
பாலகன் றன்னைப் பரிவுட னழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்
ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக்கேதென
உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்
நெற்றியி னயனமு நீயே யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் றானுந்
தானுமச் சபையிற் றரியா தேகி
எமையா ளுடைய வுமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை யொதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை யவன்கையி லீதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகையேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
றரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
மண்ணார் வதனத் தாமரை யாறுங்
கண்ணா றிரண்டுங் கரமீ ராறுந்
தூணெனத் திரண்ட தோளீ ராறு
மாணயி லாதி வான்படை யுங்கொண்
டறுமுகக் கடவுளங் கவதரித் திடலும்
மறுகிய வும்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பா லளித்திரென் றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனு முமையும் விடையுகைத் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட
இருவரு மின்பா லெடுத்தெடுத் தணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேன் முதற்பல வாயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறு மவுணரை யொறுத்திடென் றனுப்ப
இருளைப் பருகு மிரவியைப் போலத்
தகுவரென் றவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற விந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்
டமரர் கோனுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமர்ந்தினி திருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்
டமரர் மாத ரனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்ட ரெல்லா மடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ யம்பிகா பதியென
இமையவ ருரைப்ப விறைவன் றானுங்
குமரனைக் கோவங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண் டெம்வினைக் கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் றேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திமுன் னிற்க மங்கையைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கை நீதான் வருந்துத லொழிகுதி
அங்கையாாளதறிந் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றர வணிந்த புனிதனைக் காணவங்
குற்றனன் றிருமா லூழ்வினை வலியாற்
சக்கர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புட நாடச்
சாயக நேரந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் றோற்ப
இன்பவா யிதழுமை யான்வென் றேனென
எம்பெரு மானும் யான்வென் றேனென
ஒருவர்க் கொருவ ருத்தரம் பேசி
இருவருஞ் சாட்சி யிவனைக் கேட்ப
மாமனை வதைத்த மான்முக நோக்கிக்
காமனை யெரித்தோன் கட்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா ளென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய பொய்க்கரி யுடனங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங் குருத்து
நோக்கி யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தினி லொன்றாய்
மைக்கரி யுரைத்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற் றிருக்கும்
வடதரு நிழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகினிறத் துருப்போய்த்
துளவணி மருமனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தி லாயிரம் யோசனை
நீண்ட பைப் பாந்த ணெட்டுட லெடுத்து
வளர்மருப் பொன்றுடைவ ள்ளல்வீற் றிருக்குங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்சினை யாலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் றிருமுக கடவுளும்
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீ ழிருந்தான்
கம்பமா முகத்துக் கடவுடன் பெருமையை
அம்புவி யோருக்கு கறிவிப் போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பநூ லேணியிற் றாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகைக் களித்தபின் னாளில்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கி
இருபத் தோரிழை யின்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதி விநாயகற் கான வெழுத்தும்
மூன்றெழுத் ததனான் மொழிந்தமந் திரமும்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபகா ரத்தால்
வரைமகண் மதலையை வழிபா டாற்றி
இருபது நாளு மிப்படி நோற்று
மற்றநா ளைங்கர மாமுகன் பிறந்த
தற்றைநாட் சதயமு மாறாப் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெழிபுன லாடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைக ணாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரோடு
குருந்த மல்லிகை கோங்கொடு பிச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழிரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தளைக் கூவிள முதலிய சாத்தித்
தூப தீபங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்ப மோதக மவலெள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொடிவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனா மைங்கர னருளால்
விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந் துமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சின மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாப நீங்கிய தேயென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையன் றெனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னிதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவ தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றாள் நீங்கச்
சாங்குமுன் னுரைத்த சக்கிர பாணி
இக்கதை சொல்ல வக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் னோற்றபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதுமை யடைத்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேனேர் மொழியா டெழியக் கூறெனெ
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மக னோன்பி னுறுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமி லரனை யாயிழை வணங்கிப்
பொருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்தினோற் பேனென
இறைவன் கதைசொல வேந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புரிந்தோன்
சுடர்வடி வேலோன் றொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுமுந் தாமத் தாமனும்
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்ணருங் குழலுமை சாபமிட்டதுவும்
அக்குநீ றணியு மரன்முத லளித்த
விக்கின விநாயகன் விரதநோற் றதன்பின்
சுடர்க்கதை யேந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டுநீங்கி கியதும்
பவுரிகொள் கூத்துடைப் பரமனு நோற்றுக்
கவுரியன றடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நேற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவ னவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னி லிவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் னோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைமுறை வெள்ளியங் கயிலையி லுற்றான்
பரிவொடிவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்திநோற் றிடுநாள்
மற்றவன் காதன் மடவர லொருத்தி
இற்றிடு மிடையா ளிலக்கண சுந்தரி
மெத்தவன் புடனிவ் விரதநோற் பேனென
அத்தந் தன்னி லணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சிலநா ணோற்றபின்
உற்ற நோன்பி னுறுதி மறந்து
கட்டிய விழையைக் காரிகை யவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே யலருந் தளிருமாய்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை யிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்விய மில்லா ளவ்விடந் தன்னிற்
கொவ்வை யடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதகைக் கட்டி
அப்பமோ டடைகா யவைபல வைத்துச்
செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதமவட் கருள
கொண்டுபோ யரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிர மாதித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் றன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி யிம்மனை யிருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்ணென வெழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்வழி தன்னில்
யானை குதிரை யவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழு திவளிங் கிருக்கலா காதென
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்
வணிகன் றனது மனைபுகுந் திருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவர்தன் மனையி லுற்றவ ளிருப்ப
வளர்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயகல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்கு் தொழிலோர் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்துவே றாகத்
தூசரு மவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யா ரென்ன
வெம்மன மிகவு மேவி முனிவுறா
அம்மனை யவனு மகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள்புகுந் திருப்ப
அவ்வை செல்லும் அகங்க டோறும்
வைதன ரெறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குதித்தனர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் னகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண் டுலகு கருணையோ டாண்ட
மாத்தாண்ட ராசன் மாமக ளொருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லார்க்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லிவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கொட விருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் புழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி யெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டின் மணிவிளக்கேற்றிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின் றாட
மெத்தவுண் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே யகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை புணர்ந்துமுன் னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக னோன்புநோற் றிடுகெனக்
கரத்துமூ வேழிழைக் காப்புக் கட்டி
அப்பமு மவலு மாம்பல பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற் றதனால்
விற்பொலி நுதலாள் மிகமகிழ்ந் திருப்பச்
சக்கிர வாள சைனியத் தோடு
விக்கிர மாதித்தன் வேட்டையிற் சென்று
வெவ்விய தாக மிகப்பெரி தாகி
அவ்வை தன்மனை அரசனு நணுகித்
தெண்ணீர் வேட்டுச் சிலர்தமை யனுப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணீர்க் கரகமு மொருபணி காரமும்
கண்ணோர் இலக்கணை கையிற் கொடுக்கப்
பண்ணேர் மொழியாள் பார்த்திபற் குதவலும்
ஒப்புறு படையு முயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை யவைகளு முண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
எவ்வகை யாலும் இவள்நமக் காமென
இவ்வகை சமைத்தநீ யாரென வினாவ
மௌவலங் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென் றரசற் குரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடை யிவளுன் குலமனை யாட்டி
நலத்தக வாக நங்கைதன் நாமம்
இலக்கண சுந்தரி யாமென வுரைப்பத்
தீங்கற நன்மணஞ் செய்துதா வென்ன
ஆங்கவள் வதுவைசெய் தரசனுக் களித்தபின்
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கணோ் வெள்ளிச் சிவிகையினேற்றிக்
கொண்டூர் புகுந்து கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரி லுயர்பத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோ டெப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்தணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக்கேட்கச் சிறந்து.

பொற்பணைக்கை முக்கண் புகர் முகத்துப் பொன்மவுலிக்
கற்பத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவரும் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை எருதேறு விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை – உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலா தருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கின் சுதரை மிகப் பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்பெல்லாம் நல்ல பெருஞ்செல்வ மெய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

கங்கை போன்ற புனித நதிகளில் மனிதனின் பாவங்கள் கரைவது போல, அன்பைக் கையாள்பவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

தலைக்கு மேல் பறவை பறப்பதைத் தடுக்க முடியாது. ஆனால் அது உன் தலையில் கூடு கட்டுவதை நீ தடுக்கலாம்.

பிரம்மத்தை மறந்து வேறு எந்தப் பொருளைத் தேடி வாழ்ந்தாலும் அது பெரும் ஏமாற்றத்தையே அளிக்கும்.

மனித இதயம் ஊமையாகியிருந்தாலன்றி கடவுள் செவிடாகியிருப்பதில்லை.

செத்துப் போன அரசனாக இருப்பதை விட உயிரோடுள்ள பிச்சைக்காரனாக இருப்பதே மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகலி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
நேசன் அடிபோற்றி சிவன்சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும்ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்ற வித்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்த அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமா னனாம் விமலா
பொய் யாயினவெல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமாளே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் றொழும்பில்
நாற்றத்தின் னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனேதேனார முதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எங் காவலனே காண்பரிய பேரோளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொழியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றானா உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருப்பொற்சுண்ணம்

திருத்தில்லையில் அருளியது.

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
போற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின்வடுவாகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானுவந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்(கு)
ஏய்த்தபொற் சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்ற
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடகம் மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வாட்டடங் கண்மடமங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனோடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தப்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வால்குடி மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருக்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ (டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
போற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆட்கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

## ஆலயங்களில் கொடிமரம் ஏன்?

ஆலய அமைப்பில் கொடிமரம் என்பது "சூட்சுமலிங்கம்" என்று அழைக்கப்படுகின்றது. அசுரர்களை அகற்றுவதன் பொருட்டும் கணங்களையும் தேவர்களையும் அழைத்தல் பொருட்டும் ஆலயத்தையும் பக்தர்களையும் பாதுகாக்கவும் ஒவ்வொரு ஆலயத்திலும் கொடிமரம் நிறுத்தப்படுகின்றது.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்நெறி தான் தழைத்து ஓங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே

கொடிமரத்தின் முன் துதிக்கும் பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் -
கதித்தோங்கும் நிஷ்டையுங்கை கூடும் நிமலரருள்
கந்தர் சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயாவருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிர் ஐயும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம் சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனைமயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணல் எரி
தணல்எரி தணல்எரி தணல்அது ஆக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியும் நரியும் புந்நரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழ்ஒளி பவனே!
பரிபுர பவனே! பவமொளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாள் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத் தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருள் ஆக
அன்புடன் இரஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்!
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவள் நீ குரு பொறுப்பது உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுஉன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகிர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறு அணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவார்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணிந்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மணமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா பொற்றி
கடம்பா போற்றி கந்தா பொற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

-முற்றும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயாருக்குத் தகனக் கிரியை செய்கையில் பாடியது

நேரிசை வெண்பா

ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி!

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து — முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்ந்தெடுத்துத் தாழாமே — அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்?

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே! ஆமிர்தமே! சேல்வத் திரவியபூ
மானே! ஏனவழைத்த வாய்க்கு?

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி, "என்றன்
மகனே!" என வழைத்த வாய்க்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலிவிருத்தம்

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே:
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்:
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே:
யானும் இட்டதீ மூள்க மூள்கவே!

### நேரிசை வெண்பா

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ!-மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுக்க கை!

வெந்தாளோ, சோணகிரி வித்தகா! நின்பாதத்தில்
வந்தாளோ, என்னை மறந்தாளோ, - சந்ததமும்
உன்னையே நோக்கி, உகந்து வரங்கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய்?

வீற்றிருந்தாள் அன்னை: வீதி தனிலிருந்தாள்:
நேற்றிருந்தாள்: இன்றுவெந்து நீறானாள்: - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்:
எல்லாஞ் சிவமயமே யாம்.

## வள்ளலார் அருளியது

ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் உறவு வேண்டும்
உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்க வேண்டும் உனை
மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணைநிதி வேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழ வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

திருஅருட்பா

அப்பா நான் வேண்டுதல் கேட் டருள் புரிதல்
வேண்டும். ஆருயிர்கட் கெல்லாம் நானன்பு
செய்தல் வேண்டும் எப்பாரு எப்பதமும் எங்ஙணும்
நான் சென்றே – எந்தை நினதருட் புகழை
இயம்பிடல் வேண்டும். செப்பாத மேனிலை மேற்
சுத்த சிவமார்க்கம் திகழ்ந்தோங்க
அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும் தப்பேது
நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்.
தலைவ நினைப் பிரியாத நிலமையும் வேண்டுவனே.

## விநாயகர்

வேண்டுபவர்கள் வேண்டியதை அருளும் வீறுடைய நாயகன் “ஓம்” எனும் பிரணவத்தைக் தம் திருவுருவமாகக் கொண்டவர். தேவ கணங்களுக்கு எல்லாம் தலைவரான கணபதியாவார்.

வீடுகள், கோயில்களில் விநாயகரின் அமர்ந்த வடிவமே ஏற்றது. உற்சவருக்கு அமர்ந்த கோலம் இருக்கலாம். இருப்பினும் நின்றகோலமே சிறப்பாகும்.

விநாயகப் பெருமான் கடவுள், மனிதன், தேவர், விலங்கு முதலிய எல்லா உயிர்களுக்கும் அருள் புரிபவர். எனவேதான் அதை உணர்த்தும் வகையில் அவர் தம் திருவுருவத்தில் இடைக்குக் கீழ் மனிதக்கூறும், இடைக்கு மேல் கழுத்துவரை தேவக் கூறும், அதற்கு மேல் விலங்குக் கூறும் அமைந்து காணப்படுகிறார்.

‘அறிவிலும் பண்பிலும் உயர்வு பெற்றால் விலங்குகளும் உயர்வாக மதிக்கப்படும், அவற்றில் தாழ்ந்தால் தேவரும் மனிதரும் கூட இழிந்தவர்களாகக் கருதப்படுவார்கள்.’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் தத்துவத்தையே விநாயகரின் திருவுருவ அமைப்பு நமக்கு உணர்த்துகிறது.

'யானைமுகனைக் காண்பவன் எல்லா தேவர்களின் முகத்தையும் காண்பவன் ஆகிறான். யானை முகத்தவரான இந்தக் கணபதி மகிழ்ந்தால் மூவுலகிலுள்ள எல்லோரும் மகிழ்ச்சி அடைவார்கள்." என்று புஷ்பதந்தர் அருளிய கணேச மஹிம்ன ஸ்தோத்திரம் கூறுகிறது.

ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீ சதாசிவம் போன்ற தெய்வங்களில் ஸ்வரூபத்தையே தமது உடலாகக் கொண்டவர் கணேசர்.

"எப்போதும் பிரம்ம ரூபமாய, மாறுபாடுகளற்று, மாறுபாடுகளுக்கு அதிகாரணமாய், மகேசரால் வணங்கப் பெற்ற, அபரஸ்வருபமான, தனக்குள்ளே அறியத்தக்கவராக இருப்பவர் வக்ரதுண்ட விநாயகர், சூரியன், உயிரான காற்று, விஷ்ணு, வருணன், யமன், பிரம்மா, அக்கினி, இந்திரன், திக்தேவதைகள் ஆகியவர்களுக்கு ஒளியைக் கொடுத்து எல்லா தேவர்களுமாக விளங்குபவர் வக்ரதுண்ட விநாயகர்" என்று வக்ரதுண்டர் ஸ்தோத்திரம் குறிப்பிடுகிறது.

விநாயகர் காலைமடிந்து அமர்ந்த கோலம் அகரம்; தலையும் துதிக்கையும் உகரம்; வயிறு மகரம்; விந்து, நாதம் ஆகிய இரண்டும் விநாயகரின் உருவத்தில் விளையாடுகின்றன. குண்டலினி ஊர்தி,. தந்தம் பதி (இறைவனைப் பற்றிய) அறிவை விளங்கும். ஏழு உலகங்களும் கொழுக்கட்டை மந்திர சாதனை ஜபமாலை, நான்கு திருக்கரங்கள் அறம், பொருள், இன்பம், வீடு அளிக்கும் அறிகுறி முக்கண்களில் நடுக்கண் ஞானக்கண் மற்ற இரண்டு கண்கள் சூரிய, சந்திரர்கள், இதில் இடக்கண் அகாரம், வலக்கண், உகாரம் நெற்றிக் கண் மகாரம் என்று பெரியோர் கூறுவர்.

## புராணங்கள் போற்றும் பெருமான்

உபநிடதங்கள் விநாயகரைப் பரம்பொருளாக வர்ணிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக் வேதத்தில் உள்ள 'ப்ரஹ்மணஸ்பதி சூக்தங்கள்' கணபதியை விவரித்துக் கூறும் மணிவாக்குகளாகும். அவை "பிரமன், திருமால், ருத்திரன், ஈஸ்வரன், சதாசிவம் என்ற ஐந்து தேவவடிவம் கொண்ட பஞ்சகிருத்தியம் எனும் ஐந்து தொழில்களைப் புரிபவர் விநாயகர்" என்று குறிப்பிடுகின்றன.

பிரம்ம வைவர்த்தம், ஸ்காந்தம், பத்ம புராணம், கணேச புராணம், முத்கல புராணம், மானவக்ஹ்ருய சூத்திரம், யாக்ஞவல்கியம் ஸ்மிருதி முதலியவற்றில் விநாயகரின் வழிபாடு கூறப்பட்டுள்ளது.

பிரம்மாண்ட புராணத்தில் விநாயகரின் வரலாறு விரிவாகக் காணப்படுகிறது.

தனக்கு உணவு கொடுத்து அன்பு செலுத்தும் பாகன் தன் காலில் அடியினை எடுத்து வைத்தால் அவனை தன் முடி மீது உயர்த்துவது அந்தப் பாகனுக்கு இடுக்கண் வராமல் காப்பது – யானையின் குணமாகும்.

## விநாயகரின் பெருச்சாளி வாகனம்

எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவும், ஆதேயமாகவும் (தாங்குபாவராவும், தாங்கப்படுபவராகவும்) விநாயகர் இருக்கிறார் என்பதை அவரது பெருச்சாளி வாகனம் காட்டுகிறது.
பெருச்சாளி இருளை விரும்பும்; கீழறுத்துச் சென்று கேடு விளைவிக்கும்.அதனால் அது அறியாமை அல்லது ஆணவ மலத்தைக் குறிக்கும்.

எனவே பெருச்சாளிளைப் பிள்ளையார் தமது காலின் கீழ் கொண்டிருப்பது அவர் அறியாமையையும், செருக்கையும் அடக்கி ஆட்கொள்பவர் என்பதை உணர்த்துகிறது.

## ஐங்கரன்

பெருமானின் ஐந்து திருக்கரங்களும் திருவைந்தெழுத்தை உணர்த்துவதாகும்.

அங்குசம் தாங்கிய வலக்கை சிகரம், பாசம் பற்றிய இடக்கை வகரம், தந்தம் ஏந்திய வலக்கை யகரம், மோதகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள இடக்கை நகரம், துதிக்கை மகரம், இப்படியாக "சிவாயநம" என்னும் திருவைந்தெழுத்தை விநாயகரின் ஐந்து திருக்கரங்களும் உணர்த்துகின்றன.

## ஐம்பெரும் சக்தி

விநாயகப் பெருமான் பஞ்ச பூதங்களையும் தம்முள் அடக்கி முழு முதல்வனாகக் காட்சி தருகின்றார். அவரது மடித்து வைத்துள்ள ஒரு பாதம் பூமியையும், சரிந்த தொந்தி நீரையும் அவரது மார்பு நெருப்பையும் இரண்டு புருவங்களும் சேர்ந்த அரைவட்டம் காற்றையும் அதன் நடுவில் வளைந்திருக்கும் கோடு ஆகாயத்தையும் பெருமான் தம் திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்கள் ஐந்தொழிலை உணர்த்துகின்றன. அவரது பாசம் படைத்தலையும் அங்குசம் அழித்தலையும் ஒடிந்த தந்தம் காத்தலையும் துதிக்கை மறைத்தலையும் மோதகம் அருளலையும் குறிப்பிடுகின்றது.

மனித உடம்பில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம், ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. இவைகளில் முதல் ஆதாரமாகிய மூலாதாரத்தில் உறைபவர் முதல்வரான விநாயகர்.

## பரப்பிரம்மம் விநாயகர்

விநாயகரின் சிரஸ் பிரம்மம் ஆகும். உச்சந்தலை பரமேஸ்வரராகவும் எண் திசைகள் காதாகவும் அக்கினி, சூரியன், சந்திரன் முக்கண்களாகவும் பிரம்மாண்டமே இவரது கழுத்து (ருத்திரன் கழுத்து என்றும் கூறுவர்) புண்ணியம் இவரது மேல் உதடு பாவம் இவரது கீழ் உதடு, சாமவேதம் இவரது ஒலி, சூரியன் முதலிய கிரகங்களும் கிருத்திகை முதலிய நட்சத்திரங்களும் பற்கள். வேதங்கள், புராணங்கள், நியாய மீமாம்சை நூல்கள் முதலிய தெய்வீகச் சொற்களஞ்சியங்கள் (சரஸ்வதி) நாக்காகவும் இந்திரனை மூக்காகவும் யானை உடலின் கழுத்துக்கு மேல் உயர்ந்து பருமனாக உள்ள இரண்டு மாமிசப் பிண்டங்கள் (கண்டிகை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய சந்திரர்களாகவும் லட்சுமி அவரது திருமார்பாகவும் உள்ளம் வேதமாகவும் பரந்த விரிந்த ஆகாயம் அவரது தொப்புளாகவும் கடல்களைப் பெரும் வயிறாகவும் யட்சர், கந்தர்வர், அரக்கர், கின்னரர், மனிதர்கள் ஆகியவர்களை வயிற்றின் உள்ளே நாடி நரம்பாகவும் உடையவர் விநாயகர்.

கங்கை முதலிய நதிகளையும், சோணம் முதலிய நிதங்களை (நிதம் - மேற்கு நோக்கிச் செல்லும் ஆறு) கைகளாகவும், ஆதிஷேசன் முதலிய சர்ப்பராஜாக்களை விரல்களாகவும் துருவன் முதலிய நட்சத்திரங்களை கை, கால்களின் விரல்களாகவும் விநாயகர் கொண்டிருக்கிறார்.

மேருமலையை முதுகாகவும் மண்ணுலகத்தைத் தம் இடையாகவும் உயிரினங்களை தமது குறியிலும் மலைகளைத் துடைகளாகவும் அச்வினி தேவரை முழந்தாள்களாகவும் மண்ணுலகின் கீழ் உள்ள பாதாளத்தைக் கணுக்காலாகவும் பாதாளத்தில் தவம் செய்யும் முனிவர்களை உள்ளங் கால்களாகவும் காலனைக் கட்டை விரல்களாகவும் மூன்று வேதங்களை உடலனைத்துமாகவும் கொண்டவர் விநாயகர். துருவன் முதலிய ஜோதி மண்டலத்தை வாலாக அமைத்துக் கொண்டவர். அடியவரின் உள்ளத்தை கட்டுத்தறியாகக் கொண்டு அசையாமல் வீற்றிருப்பவர். அடியவரின் உள்ளம் என்ற தாமரையின் உள்ளே இருக்கும் தஹராகாசத்தைத் தாம் குளித்து களித்து விளையாடும் குளமாகக் கொண்டவர் விநாயகர்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

## காயத்ரீ மந்திரம்

'காயத்ரீ' மந்திரத்தை முதல்முதலில் இறைவனே படைப்பின் தொடக்கத்தில் வெளிப்படுத்தினார் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும். இந்த மந்திரம் பழமையிலும் பழமையான பரம்பொருளைப் பற்றிய மந்திரம் என்பது அனைவரும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் பூர்புவஸ்ஸுவ தத்ஸவிதுர் வரேண்யம்!

பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோ யோ ந!

ப்ரசோதயாத் !! என்பது காயத்ரீ மந்திரம், இதன் பொருள் வருமாறு

ஓம் - பரப்பிரம்மத்தின் அடையாளம்

பூ - ஸ்தூல உலகம்

புவ - அந்தரிஷம் (நட்சத்திர மண்டலம்)

ஸிவ - சொர்க்கம் முதலான சூட்சும உலகங்கள்

தத் - தத் பொருளான பரமாத்மா, கடவுள் அல்லது பிரம்மம்

ஸுவிது - இறைவன் அல்லது படைத்தவர்

வரேண்யம் - பூஜிப்பதற்குரிய மிக உயர்ந்த

பர்க - பாவங்கள் அல்லது அஞ்ஞானத்தைப் போக்குபவர் மகிமை பெற்றவர் அல்லது ஜோதி மயமானவர்.

தேவஸ்ய - ஜொலிக்கின்ற (ஞான சொருபமானவர்) பிரகாசிக்கின்ற

தீமஹி - நாங்கள் தியானம் செய்கிறோம்

திய - புத்தி (அறிவு)

ய - எவர்

ந – எங்களுடைய (நம்முடைய)

ப்ரசோதயாத் - தூண்டட்டும்

பொழிப்புரை - இந்த மூன்று உலகங்களையும் சிருஷ்டித்தவரும் பூஜிக்கத்தகுந்த வரும், ஞானம் ஜோதி சொருபமாக இருப்பவரும் எல்லாப் பாவங்களையும் அவித்தையையும் போக்குபவராக இருக்கும் இந்த பரமாத்மாவாகிய ஈசுவரனின் அளவற்ற மகிமையைத் தியானம் செய்கிறோம். அந்த மேலான பரம் பொருள் நமது புத்திகளை நடத்தி வழிகாட்டுவாராக நமது புராதன மந்திரங்களில் மிகவும் நேர்த்தியானதும், மிகவும் சக்தி வாய்ந்துமான மந்திரம் காயத்ரீ தான். விவரிக்க முடியாத அளவிற்கு அதற்குள் சக்தி அடங்கியுள்ளது. நம்முள் உறங்கிக் கொண்டிருக்கும் ஆன்மிக சக்தியைத் தட்டி எழுப்பக் கூடிய மந்திரமே காயத்ரீ மந்திரம். மேலும் "வேதமந்திரங்களில் நான் காயத்ரீயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகிறேன்." என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கீதையில் குறிப்பிடுகிறார். எனவே மந்திரங்களில் தலை சிறந்தது காயத்ரீ மந்திரம் என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே நாம் நமது தாயைக் காப்பாற்றுவது போல காயத்ரீயைக் காப்பற்ற வேண்டும். காயத்ரீ ஏன் வேதமாதா என்று அழைக்கப்படுகின்றாள்? "வேதங்கள் அனைத்தினுடைய சாரம் காயதிரீ" என்று பகவான் ஸ்ரீ ராம கிருஷ்ணர் அடிக்கடி சொல்வது வழக்கம்.

"வார்த்தைகள் இல்லாது பிரம்மம் ஒன்று உண்டு. வார்த்தை உள்ள பிரம்மம் ஒன்று உண்டு." என்று தைத்ராயண உபநிடதம் குறிப்பிடுகிறது. மேலும் "அந்த வார்த்தையே ஓம் ஒலியாகும் என்று அது கூறுகிறது அந்த வார்த்தையே பிரணவம் எனப்படும். ஓங்காரம் இந்தப் பிரணவத்தின் மூன்று எழுத்துக்களான அ, உ, ம ஆகியவற்றில் இருந்துதான் "பூர்பு வஸ்ஸுவ" என்ற வியாஹ்ருதிகள் தோன்றின. இந்த மந்திரச் சொற்களிலிருந்து காயத்ரீயின் பிரிவுகளும் அவற்றிலிருந்து வேதங்களும் தோன்றின என்பர்.

அதாவது "தத் ஸவிதுர் வரேண்யம்" என்ற சொல்லில் இருந்து ரிக்வேதமும், "பர்க்கோ தேவஸ்ய தீமஹி" என்பதிலிருந்து யஜுர் வேதமும், "தியோயோந ப்ரசோதயாத்" என்பதிலிருந்து சாமவேதமும் தோன்றின என்பர். இந்த மந்திரம் சந்தியா காலத்தில் அவசியம் ஜபம் செய்யப்பட்ட வேண்டிய மந்திரமாகும்.

தியானத்திற்கு ஏற்ற சூழ் நிலையிலுள்ள சூரியோதமும் சூரிய அஸ்தமனமுமாகிய இரண்டு சந்தியா காலத்தையே இந்த மந்திர உபாசனைக்கு நமது ரிஷிகள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதனால் சந்தியா உபாசனை என்றாலே காயத்ரீ உபாசனை தான். என்று ஆகிவிடுகிறது. இந்த "காயத்ரீ" என்ற சொல்லுக்கும் பொருள்தான் என்ன? காயந்தம் த்ராயத இதி காயத்ரீ அதாவது "எவன் தன்னைப் பாடுகிறானோ அவனைக் காப்பாற்றுவள்" என்பது இதன் பொருள் எனவே ஆத்ம சாதகனைரட்சிக்கும் ஒரு மேலான மந்திரமே காயத்ரீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காயத்ரீ"யின் பெருமை

பழங்காலத்தில் கௌதமர் என்னும் மகாமுனிவர் தேவியைக் குறித்து சிறந்த முறையில் தவம் செய்து சித்திகள் பலவற்றைப் பெற்றார். பிறகு அவர் தேவியின் அபரவடிவமான காயத்ரீயை ஜெபித்து தேவியைத் தரிசித்து பூரண அருளைப் பெற்றுக் திகழ்ந்தார்.

ஒருமுறை உலகத்தில் மழையே பெய்யாமல் பன்னிரரெண்டு ஆண்டுகள் பஞ்சம் வந்தது. அப்பொழுது பசும்புல்லைக் காண்பதும் அரிதாக இருந்தது. உணவுக்கும் நீருக்கும் மக்கள் பட்ட துன்பத்திற்கும் அளவே இல்லை. அதனால் காட்டில் வாழ்ந்து வந்த பிராமணர்கள் பலர் ஒன்றுகூடி கௌதமருடைய அசிரமத்தை அடைந்தனர். அவர்கள் கௌதம முனிவரை கண்டு அவருடைய திருவடிகளில் வீழ்ந்து "காயத்ரீ" தேவியின் பூரண அனுக்கிரகத்தைப் பெற்ற மகரிஷியே ! நாங்கள் பசியாலும் தாகத்தாலும் வருந்துகிறோம். எங்களைப் பாதுகாப்பது தங்கள் கடமையாகும். எங்களுக்கு வேறு கதி இல்லை என்று கூறி நின்றனர்.

அவ்வாறு கலங்கிக் கண்ணீர் விட்டுநின்ற பிராமணர்களைக் கருணாமூர்த்தியான கௌதமர் பார்த்து மனம் வருத்தி "நீங்கள் அஞ்சவேண்டாம். ஜகதன்னை உங்களைக் காப்பாற்றுவாள்." ஏன்று ஆறுதல் கூறி அவர்களை அமரச் செய்தார். பின்னர் அவர் திவ்ய மங்கள ஸ்வரூபியும், இன்பம் வழங்குபவளும், வேதஸ்வரூபியுமான காயத்ரீ தேவியைக் குறித்து ஒரு திவ்ய அன்னை ஹோமகுண்டத்தின் மூலமாக அட்சயபாத்திரம் ஒன்றைக் கொடுத்தருளினார். அதன் மகிமையால், கௌதமர் தம்மை வந்தடைந்த எல்லோருக்கும் அறுசுவை உணவு அளித்து, ஆடைகளும். அணிகளும் தந்து அவர்கள் தங்குவதற்கு மாளிகைகளையும் அமைத்துக் கொடுத்தார். கௌதமரின் புகழ் மூவுலகங்களிலும் பரவியது. தேவேந்திரன் கௌதமரைப் பாராட்டினான். அவ்வாறு அவன் பாராட்டியதை நாரதர் பூவுலகுக்கு வந்து கௌதமரிடம் கூறினார். அது கேட்டுக் கௌதமர் பெரும் மகிழ்ச்சியுற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு நாட்டில் மழைபொழிந்தது. பஞ்சம் நீங்கியது. நாடு நாடாயிற்று.

கௌதமர் அட்சயபாத்திரத்தைக் கொண்டு, மக்களுக்கெல்லாம் உண்டியும், உறையுளும், ஆடை அணிகளும் வழங்கியதன் மூலம் அவரது புகழ் மூவுலகங்களிலும் பரவியது. அதனால் அவருக்குச் சிலர் பொறாமையால் ஏதேனும் பழி சுமத்தவிரும்பினர்கள். எனவே மரணத்தறுவாயில் இருக்கும் ஒரு கிழப்பசுவைக் கௌதமர் செய்து வந்த கோபூஜைக்காக கொண்டு வந்து நிறுத்தினர். அவர்களுடைய சூதினை உணராத கௌதமர் அப்பசுவின் மீது அபிஷேகத்திற்காகப் புனித நீரைப் கொட்டினார். அவ்வளவில் அக்கிழட்டுப் பசு நடுநடுங்கிக் கீழே விழுந்து உயிர் துறந்தது. இந்த நிகழ்ச்சியை அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பொறாமைக்கார்கள் நன்றியுணர்ச்சி அற்றவர்களாய் "ஐயோ! எத்தனைபாவம்! முனிவா பசுவைக் கொன்று விட்டாரே! இதனை விடக் கொடியபாவம் வேறு இல்லை. இனி இந்த ஆசிரமத்தில் தங்குதலும் பாவம்" என்று கூறியவாறே புறப்படலாயினர். முனிவர் சிறிது நேரம் மயங்கி நின்றார். அன்னை காயத்ரீயைத் தியானித்தார். அவ்வளவில் அவருக்கு உண்மை புலப்பட்டது. பொறாமைக் காரர்களிக் சூது விளங்கியது. பெருஞ்சீற்றம் கொண்டு சாபம் இட்டார். சாபத்தின் கொடுமை தாங்காது அவர்கள் கௌதமரின் கால்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டனர். "ஜீவன்களை மன்னிப்பது அன்னையின் பூஜைக்குச்சமம். நீங்கள் பல்லாண்டு இத்துயரை அனுபவித்தபின் சித்திரை மாதம் சுக்கலபட்சத்து நவமி அன்று அன்னையை பூஜைசெய்து இச்சாபத்திலிருந்து விடுதலை பெறுவீராக. என்று திருவருள் செய்தார். பொறாமைக்காரர்களும் நிம்மதியுடன் திரும்பிச் சென்றார்.

கௌதமர் பிறகு அமைதியாகப் பராசக்தியைக் குறித்து பீஜாசக்ஷரத்துடன் ஜபம் செய்தார். அதனால் அன்னை அவருக்குக் காட்சி கொடுத்து அவரைப் பார்த்து, புன்முறுவலுடன் "கௌதமா பயப்படாதே." என்று கூறி மறைந்தருளினார். புவனேசுவரியின் பெருங்கருணைத் திறனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு மயிர்கூச்செறியப் பெற்ற கௌதமர் மேலும் மேலும் அன்னையைப் பூஜை செய்வாராயினர்.

ஒரு அரசன் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தான். வைத்தியர்களின் முயற்சி பலனளிக்காது போகவே அவன் மந்திரவாதிகளின் உதவியை நாடினான். அச்சமயம் ஒரு சாது வந்திருந்தார். "உங்களுடைய கொடிய வியாதியை என்னால் குணமாக்க முடியாது. ஆனால் நான் உபாயம் செய்கிறேன். வாளுடன் ஒரு பதுமையை இங்கு வைக்கிறேன். இந்த பதுமை தன் வாளைக் கீழே போடும்படி எவன் செய்கிறேனோ, அவன் உங்கள் நோயை முற்றிலும் குணப்படுத்துவான்." என்று அரசனிடம் கூறினார். அரசனும் வாளைக் கீழே விழும்படி செய்பவனுக்கு பாதி ராஜ்யம் அளிப்பதாகப் பறைசாற்றினான். எளிதாகச் செய்து விட முடியும் என்று நினைத்துப் பலர் முயன்றனர். ஆனால் பதுமையோ வாளைக் கீழே எறியவில்லை. அங்கு சஞ்சாரம் செய்து கொண்டிருந்த பிராமணன் ஒருவன் விபரமறிந்து அந்தப் பதுமையிடம் வந்தான். பதுமை அவனிடம் மூன்று விரல்களைக் காட்டியது. அந்தணன் மறுப்புத் தெரிவித்தான். பதுமை அவனிடம் இரண்டு விரல்களைக் காட்டியது. அந்தணன் மறுப்புத் தெரிவித்தான். பிறகு பதுமை ஒரு விரலைக் காட்டியது. அந்தணன் சம்மதித்தான். பிறகு கரத்தில் ஜலம் வார்த்து எறிந்தது. அரசனின் வியாதியும் உடனே குணம் அடைந்தது. குழுமி இருந்த அரசனுக்கும் மற்ற மக்களுக்கும் இந்நிகழ்ச்சி ஆச்சர்யத்தைக் தந்தது.

அரசன் அந்தணனை விளக்கம் கேட்வே அவன் " நான் என் வாழ்க்கையில் செய்திருக்கும் காயத்ரீ ஜெபத்தின் பலனின் மூன்று பாகத்தைத் தானமாக கேட்டது அந்தக் தேவதை. மூன்று பாகம் தர நான் சம்மதிக்கவில்லை. பின் இரண்டு பாகத்தைத் தானமாக தரக்கேட்டது. அதற்கும் நான் சம்மதிக்கவில்லை. பிறகு ஒரு பாகம் தானமாகக் கேட்டது. அதைக் கொடுக்கச் சம்மதித்தால் தேவதை வாளை எறிந்தது. உங்கள் வியாதியும் குணமாயிற்று." என்றார். அரசன் அந்தணனைப் பாராட்டி அவனுக்குத் தன் ராஜ்யத்தில் பாதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர முன் வந்தான். அந்தணனோ ராஜ்யம் தனக்குத் தேவையில்லை. என்றும் ஜபம் செய்வதற்குத் தனிமையான இடம் கிடைத்தால் போதும் எனக்கூற அரசன் அவருக்குத் தகுந்த இடம் அமைத்துக் கொடுத்தான். மக்களும் காயத்ரீ ஜெபத்தின் மகிமையை உணர்ந்தனர்.

ஞானபூமி

## காயத்ரீ ஜபம் (மந்திரம்)

குரு காயத்ரீ

ஓம் குருதேவாய வித்மஹே, பரப்ரஹ்மணே தீமஹி!
தன்னோ குரு ப்ரசோதயாத்!!

ஸ்ரீ கணேச காயத்ரீ

ஓம் ஏகதந்தாய வித்மஹே, வக்ரதுண்டாய தீமஹி!
தன்னோ தந்தீ ப்ரசோதயாத்!!

ஹம்ஸ காயத்ரீ

ஓம் பரமஹம்ஸாய வித்மஹே, மஹாதத்வாய தீமஹி!
தன்னோ ஹம்ஸ் ப்ரசோதயாத்!!

பத்மா காயத்ரீ

ஓம் மஹா லக்ஷ்மியை ச வித்மஹே போகதாயை சதீமஹி!
தன்னோ பத்மா ப்ரசோதயாத்!!

ஷண்முக காயத்ரீ

ஓம் ஷண்முகாய வித்மஹேமஹா சேனாய தீமஹி!
தன்னோ ஸ்கந்த ப்ரசோதயாத்!!

ராம காயத்ரீ

ஓம் தசரதாய வித்மஹே ஸீதாவல்லபாய தீமஹி!
தன்னோ ராமப்ரசோதயாத்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ண காயத்ரீ

ஓம் தேவகி நந்தனாய வித்மஹே வாசுதேவாய தீமஹி!

தன்னோ கிருஷ்ணப் ப்ரசோதயாத்!!

நரசிம்ம காயத்ரீ

ஓம் வஜ்ரநகாய வித்மஹே தீக்ஷ்ணதம் ட்ராய ஷ்தீமஹி!

தன்னோ ந்ரு ஸிம்ஹ ப்ரசோதயாத்!!

ஸுதர்ஸந காயத்ரீ

ஓம் ஸுதர்ஸநாயவித்மஹே மஹா ஜ்வாலாய தீமஹி!

தன்னோ சக்கர ப்ரசோதயாத்!!

கௌரீ காயத்ரீ

ஓம் ஸ்பகாயை வித்மஹே கமல மாலின்யை தீமஹி!

தன்னோ கௌரீ ப்ரசோதயாத்!!

ஜயதுர்க்கா காயத்ரீ

ஓம் நாராயண்யை வித்மஹே துர்க்காயை சதீமஹி!

தன்னோ கௌரீ ப்ரசோதயாத்!!

மீனாக்ஷீ காயத்ரீ

ஓம் உந்நித்ரியை வித்மஹே சுந்தரப்பிரியாயை சதீமஹி!

தன்னோ மீனாதேவி ப்ரசோதயாத்!!

திரிபுரஸுந்தரீ காயத்ரீ

ஓம் ஐம் த்ரிபுராதேவ்யை வித்மஹே

க்லிம் காமேச்வர்யை சதீமஹி!

ஸௌ: தன்னோ க்லிணா ப்ரசோதயாத்!!

காலிகா காயத்ரீ

ஓம் காலிகாயை வித்மஹே ச்மசான வாஸின்யை தீமஹி!

தன்னோ அகோரா ப்ரசோதயாத்!!

அன்னபூர்ணா காயத்ரீ

ஓம் பகவத்யை ச வித்மஹே மஹேச்வர்யை சதீமஹி!

தன்னோ அன்னபூர்ணா ப்ரசோதயாத்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஷ்மி காயத்ரீ

ஓம் மகாதேவ்யை ச வித்மஹே ஸர்வஸித்யை சதீமஹி!
தன்னோ லக்ஷ்மி ப்ரசோதயாத்!!

ம்ருத்யுஞ்சய காயத்ரீ (சிவபெருமான்)

ஓம் மஹா தேவாய வித்மஹே
ம்ருத்யுஞ்சயாய தீமஹி!
தன்னோ ருத்தி ப்ரசோதயாத்!!

ஸ்ரீ ஆஞ்சநேய காயத்ரீ

ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே
வாயு புத்திராய தீமஹி!
ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே
மகா வீராய தீமஹி!
தன்னோ ஹனுமாந் ப்ரசோதயாத்!!
ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே
ராம தூதாய தீமஹி!
தன்னோ ஹனுமாந் ப்ரசோதயாத்!!

சிவ காயத்ரீ

ஓம் தத்புருஷா வித்மஹே
மகாதத்வாய தீமஹி!
தன்னோ ருத்ர ப்ரசோதயாத்!!

சபரிமலை ஐயப்பன் காயத்ரீ

ஓம் பூதநாதாய வித்மஹே
பவநந்தனாய தீமஹி!
தன்னோ சாஸ்தா ப்ரசோதயாத்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரஹ காயத்ரீ மந்திரங்கள்

சூர்ய காயத்ரீ

ஓம் அச்வ த்வஜாய வித்மஹே
பாச ஹஸ்தாய தீமஹி!
தன்னோ ஸுர்ய ப்ரசோதயாத்!!

சந்திர காயத்ரீ

ஓம் பத்மத்வஜாய வித்மஹே
ஹேமரூபாய தீமஹி!
தன்னோ ஸோம ப்ரசோதயாத்!!

அங்காரகன் (செவ்வாய்) காயத்ரீ

ஓம் வீரத்வஜாய வித்மஹே
விக்ன ஹஸ்தாய தீமஹி!
தன்னோ பௌம ப்ரசோதயாத்!!

புதபகவான் காயத்ரீ

ஓம் கஜ த்வஜாய வித்மஹே
சுக ஹஸ்தாய தீமஹி!
தன்னோ புத ப்ரசோதயாத்!!

குரு (வியாழன்) காயத்ரீ

ஓம் வ்ருஷப த்வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி!
தன்னோ குரு ப்ரசோதயாத்!!

சுக்ரபகவான் (வெள்ளி) காயத்ரீ

ஓம் அச்வ த்வஜாய வித்மஹே
தநூ ஹஸ்தாய தீமஹி!
தன்னோ சுக்ர ப்ரசோதயாத்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிபகவான் காயத்ரீ

ஓம் காக திவஜாய வித்மஹே

கட்க கஸ்தாய தீமஹி

தன்னோ மந்த ப்ரசோதயாத்!!

ராகு காயத்ரீ

ஓம் நகத்வஜாய வித்மஹே

பத்ம ஹஸ்பிதாய தீமஹி!

தன்னோ ராகு ப்ரசோதயாத்!!

கேது காயத்ரீ

ஓம் அச்வ த்வஜாய வித்மஹே

சூல ஹஸ்பிதாய தீமஹி!

தன்னோ கேது ப்ரசோதயாத்!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

## திருமதி தையலம்மை கணபதிப்பிள்ளை அவர்களின் வம்சாவழி

**பெற்றோர்**

திரு திருமதி: நாகலிங்கம் வள்ளியம்மை (அமரர்கள்)

**சகோதரர்கள்**

1. ஐயம்பிள்ளை (அமரர்) + வள்ளியம்மை (அமரர்)
2. **தையலம்மை**
3. நாகமுத்து (அமரர்) + வைரவநாதன் (அமரர்)
4. சோமசுந்தரம் (அமரர்)
5. பார்வதி (அமரர்) + சின்னத்தம்பி (அமரர்)
6. தங்கவேலு + பார்வதி
7. சுப்பையா + நாகேஸ்வரி
8. இராசமணி + கனகசபை
9. லெட்சுமி + இளையதம்பி

**கணவன்**

கணபதிப்பிள்ளை

**மக்கள் + மருமக்கள்**

1. கந்தசாமி + கமலாம்பிகை (அமரர்)
2. திருஞானம் (அமரர்) + கமலம்
3. குமரேசன் (அமரர்) + லலிதாதேவி
4. யோகராணி + நவரெத்தினராசா (அமரர்)
5. சியாமளவல்லி + சண்முகநாதன்
6. தில்லையம்பலம் + இராஜேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

**கந்தசாமி + கமலாம்பிகை (அமரர்)**

1. கருணாகரன் + சாரதாதேவி (சுவிஸ்) → கமலினி, திலீபன்
2. சாந்தலெட்சுமி + பத்மநாதன் (கனடா) → அகிலன், கிரிசாந், அபினயா
3. முருகதாசன் + கலாநிதி (சுவிஸ்) → அபினயா, அபிகாஸ்
4. சற்குருநாதன் + கஸ்தூரிபாய் (சுவிஸ்) → சதுர்ஷா, கரிஷன்
5. சிறிறங்கன் + சிவநந்தினி (சுவிஸ்) → விதுர்ஷன், தமிழினி, ஹருணி
6. சாந்தரூபி + சத்தியபாலா (சுவிஸ்) → சதீஸ், சபேஸ், சௌமியா, சகானா
7. சாந்தரூபன் + கலைச்செல்வி (லண்டன்)

**திருஞானம் (அமரர்) + கமலம்**

1. இரஞ்சிதமலர்(அமரர்) + சிவராசா(கனடா) →
   - சிவா + விஜயன் → விதுர்சன், விதுர்சா
   - பிரியா
   - பிரவீனா
   - தேன்கவி
2. யோகமலர் + கிருபாமூர்த்தி (அமரர்) (ஜேர்மனி) → வசந்தரூபன்(அமரர்), நிசாந்தி, சகானா, கபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. புஸ்பராணி + பரமேஸ்வரன் (ஜேர்மனி) → பிரியங்கா
4. விக்னேஸ்வரன் + விஜயகுமாரி(ஜேர்மனி) → சயந்தன், சயந்தினி
5. பத்மசீலன் + கலாமதி → லோகதர்சன், பவித்திரா, பவிதா
6. பாஸ்கரன் (கனடா)
7. கேதீஸ்வரி (அனலை)
8. அகிலன் (அனலை)

**குமரேசன் (அமரர்) + லலிதாதேவி**

↓

1. சுசீலா + உதயசீலன் → ஷாத்விகா, ஷாஜிகா, இந்துஷான், துஷ்யந்தன், ஜட்சனன், திஷாளன்
2. ரஞ்சினி + ஆதித்தமூர்த்தி → பாமதி, தரிசனன், தரிசனா, நிரோஜன்
3. குமாரதேவன் + பிறேமா → ரட்சிகா
4. குமாரதேவி + ஜெயராசா(ஜேர்மனி)
5. அருள்குமரன்
6. சங்கீதா + சிறிமாறன் → சுஹாஷினி, கலாஜினி, கௌசிகா
7. நிர்மலன்
8. பிரணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யோகராணி + நவரெத்தினராசா (அமரர்)**

**(கனடா)**

1. அரிகரன் (கனடா)
2. கார்த்திகா + சுரேந்திரன் (ஜேர்மனி) ⟶ சிவன்

**சியாமளவல்லி + சண்முகநாதன் (கனடா)**

1. லோகேஸ்வரன் + சாமினி (சுவிஸ்) ⟶ யதுர்சன், லதுர்சன்
2. யசோதா + சத்தியநாதன் (கனடா) ⟶ சோபியா
3. கேதீஸ்வரன் + சிவாஜினி (பிரான்ஸ்) ⟶ தனுசியா, அபிசன்
4. ரதீஸ்வரன் + நித்தியா (கனடா) ⟶ சிறீஜா
5. கோணேஸ்வரன் (கனடா)

**தில்லையம்பலம் + இராஜேஸ்வரி**

1. கவிதா + சுகைதரன் (சுவிஸ்) ⟶ வீஷ்மன்
2. கபிலன் + தர்சினி (சுவிஸ்) ⟶ அஷ்வினி
3. கவிந்தன் (சுவிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி நவிலல்

உயிருள்ளவரை உள்ளத்தால் நேசித்தவர்களுக்கும் எமது அன்னையின் உயிர் பிரிந்தபோது ஆறுதல் அளித்த உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதிக்கிரியைகளை நிறைவாக செய்ய ஒத்துழைப்பு நல்கிய அன்பு நெஞ்சங்களுக்கும் எமது அம்மாவின் இந்நினைவு நாளில் பங்கேற்று, அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்த அனைவருக்கும் இந்நூலை சிறப்பாக வடிவமைத்துத் தந்த நண்பர்களுக்கும் அச்சகத்தாருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மக்கள்

மருமக்கள்

பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திதியை மறவோம்
## ஆங்கிலம்
## 16.09.2006
## தமிழ்
## புரட்டாதி மாதம்
## அபரபட்சத் தசமி

நேற்று என்பது போய் விட்ட ஒன்று.

நாளை இன்னமும் வரவில்லை.

நாளை நடக்கப்போவதை யாராலும் அறிய முடியாது.

நீ இன்றைக்காக வாழ்

இன்றைய பொழுதை இனிமையாகக் கழி.

அடுத்தவர்க்கு எம்மாலான உதவியை செய்வதும்

பொழுதை இனிமையாக்கும் ஒரு வழியே.

கஜமுகன் பிறின்டேர்ஸ்
நல்லூர்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org